# Chezhumai

# செழுமை




T I S T  F a r m e r s  H e l p  W o r l d w i d e  P r o b l e m

## The International Small Group & Tree Planting Program

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

## HELPLINE

For any information or help
Dial 9003020836 / 9003020837

If you have any difficulty in
TIST Program dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road,

## தொழில் முறை உதவி

எந்த தகவல் அல்லது உதவிக்கு **9003020836 / 9003020837** ஐ டயல் செய்யவும்.

டி.ஐ.எஸ் டி திட்டத்தில் உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால் **9840299822** ஐ டயல் செய்யவும்

ஏங்களது தொலைபேசி
+91 44 42188438

எங்களது மின் அஞ்சல் (ஈ–மெயில்)
josephrexon@tist.org

எங்களது விலாசம்
**19/8,** ஏரிக்கரைச் சாலை, கோட்டூர்
சென்னை **600085.**




Quantifier Neelakandan is taking a picture of a grove along with the member of the groups after a quantification
கணக்கீட்டாளர் நீலகண்டன் கணக்கு எடுத்த பிறகு பாம் கருவியால் தோப்பையும் அதன் உரிமையாளர்களையும் சேர்த்து புகைப்படம் எடுக்கிறார்.




## Why plant trees?

- Planting trees is cheapest and most effective way to clean our atmosphere.
- One full grown tree can sequester carbon dioxide at a rate of 22 kgs/year.
- While planting new trees, it is also a good practice to protect already existing trees.

If a tree dies, plant another in its place. - Linnaeus

**ஓர் மரம் பட்டுபோனால் அந்த இடத்தில் வேரு ஒன்றை நடவுசெய்ய வேண்டும் – லினாயோஸ்**

## மரங்களை ஏன் வளர்க்க வேண்டும்

- மரங்கள் குறைந்த பணச்செலவில் நடவு செய்து வளர்க்கலாம், இவைகள் சுற்றுப்புறச் சூழலை சுத்தம் செய்கின்றன.
- நல்ல வளர்ந்த ஒரு மரம் ஓர் வருடத்தில் 22 கிலோ கார்பன்டை–ஆக்சைடு ($CO_2$) உள்வாங்கி கொள்கின்றன.
- புதிய மரம் நடவு செய்வது நல்ல ஒரு செயல், அதே நேரத்தில் வளர்ந்த பழைய மரங்களை பாதுகாப்பது மிக முக்கியமானதொரு செயல்

## Useful trees to plant

It is good to plant useful trees. Most of the group members are planting long standing trees. Axlewood Tree, this tree grows in very low rain fall area and this also grows in areas where there is rainfall more than 625 mm. The below write-up on Axlewood Tree is a copy from the book provided by the DFO, CPP Division, Forest Department, Vellore District. If anyone is interested to have the same in English, please write a mail to josephrexon@tist.org or call 9840299822.

## பலன் தரும் மரங்கள்

நல்ல பலன் தரும் மரங்களை நடுவது ஒரு நல்ல செயல். அனேகமான சிறுகுழு உறுப்பினர்கள் நீண்ட கால மரங்களை நடவு செய்கின்றனர். கீழே வரும் இந்த வெள்நாகு மரத்தினை பற்றிய கட்டுரை மாவட்ட வனபாதுகாவலர் (CPP Division வேலூர் மாவட்டம்) வழங்கிய வளம் தரும் மரங்கள் பாகம் 2 புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் பெற விருப்பம் உள்ளவர்கள் தயவு செய்து இந்த மெயிலுக்கு எழுதவும் josephrexon@tist.org அல்லது செல்:9840299822.

## வெள் நாகு – பயிர் முறை

வேறு எந்த மரமும் வளர இயலா வறண்ட, மண் அரிப்பு ஏற்பட்ட செவ்வல் நிலங்களிலும் வெள்நாகு வளர்ந்துவிடும், ஆண்டிற்கு 625 மில்லிமீட்டர் அளவிற்குமேல் மழை கிடைக்கும் இடங்களில் எல்லாம் வளரக்கூடியது. வறட்சியையும் நன்கு சமாளித்துக் கொள்ளும் திறனுடையது. முளைத்து 10-20 செ.மீ. வளர்ந்த கன்றுகூட, 45. செ.மீ. ஆழத்திற்கு வேரை வளர்த்துக் கொள்ளும் திறனுடையது. அதனால் வறட்சியில் தண்டுப் பகுதி கருகி விட்டாலும், அடுத்த மழையில் வேர்ப்பகுதியிலிருந்து. துளிர் வந்து விடும். இது குறித்து இராஜஸ்தானத்தில் ஒரு சோதனை நடைபெற்றுள்ளது. 1965-69ம் ஆண்டுகளில் தொடர்ந்து மழை பெய்யாத போது, செடிகள் எல்லாம் காய்ந்து விட்டன. பின்னர் மழை கிடைத்ததும். நன்கு துளிர்த்து வளர்ந்தன. என்று கண்டுள்ளனர்.

மேலும் வெள்நாகு மரம் மணல்சாரி நிலங்கள், பாறைப் பகுதிகள் ஆகிய இடங்களிலும் வளரும். மண்கண்டம் குறைவாகவுள்ள இடத்திலும் வளர்ந்திடும். சதுப்பு நிலங்கள் மற்றும் அமில நிலங்கள் ஆகியவற்றைத் தவிர இதர இடங்களில் வளரும் திறனுடையது. நீர் தேங்கியிருக்கும் இடங்களில் வளராது. வண்டல் மண்ணில் செழித்து வளரும். நிழலில் சரிவர வளராது.

தமிழகச் சூழ்நிலைக்கு மிகவும் உகந்த மரம், வெள்நாகு வறண்டபகுதிகள் எங்கும் நட்டு வளர்க்கக்கூடியது மானாவாரிப் பகுதிகளில் ஒவ்வொருவரும் ஒரு சில மரங்களை நட்டு வளர்த்துப்பயனடையலாம். தோட்டங்களில் காற்றுத் தடுப்பு மரமாகவும் வளர்க்கலாம்.

நகரங்களிலும், கிராமங்களிலும் சாலை மரங்களாகவும் வளர்க்கலாம்.' டானின் சத்து எடுக்கும் தொழிலை ஊக்குவித்தால் நல்ல வருவாய் பெறும் வாய்ப்பும் ஏற்படும்.

வெள்நாகு மரத்தை வளர்க்க, விதையை நாற்றுவிட்டு கன்றுகளை நடலாம். அல்லது நாற்றுக் குச்சிகள் தயாரித்தும் நடலாம். முளைக்கக்கூடிய விதை பெறுவதில் ஒரு பிரச்சினை உள்ளது. சாதாரணமான காலங்களில் பூத்துக் கிடைக்கும் விதையின் முளைப்பு குறைவாக இருக்கும். வறட்சிக் காலங்களில் பூத்துக் கிடைக்கும் விதையின் முளைப்பு அதிகமாக இருக்கும். ஒரு கிராம் எடையில் 100–125 விதைகள் இருக்கும். மேட்டு நாற்றங்காலில் நாற்றுவிட வேண்டும் விதைத்த 3வது வாரத்திலிருந்து 6வது வாரம் வரை முளைத்துக் கொண்டிருக்கும். முளைத்ததும் 10 செ.மீ இடைவெளிக்கு ஒரு நாற்றாக வைத்துக் கொண்டு மற்றதை எடுக்கவேண்டும். 20செ.மீ உயரம் வளர்ந்த நாற்றுக்களை நடலாம். இடைவெளி 6x6 மீட்டர் 2 வருட வளர்ச்சியுடைய நாற்றுக்களிலிருந்து நாற்றுக் குச்சிகள் தயாரித்து நடவேண்டும்.

ஆரம்ப வளர்ச்சி நிதானமாக இருக்கும். பின்னர் வளர்ச்சி துரிதப்படும் 20–25 வருடங்களில் மரத்தை உபயோகிக்கலாம்.

## Short cycle crops intercropped with longstanding trees - avenues to increase the income

It is a good practice to do intercrop in between the longstanding trees. To do this, primarily, the longstanding trees should be planted with good spacing. This will help the members to utilize their resources effectively to produce more for their own need and for the market need. Before starting the intercrops, be sure that the particular intercrop species does not affect the trees.

- Mango Trees: Vegetables & groundnut can be raised
- Guava Trees: Short duration vegetables can be raised
- Sapota Trees: Short duration vegetables can be raised

## குறுகிய கால பயிர்கள் ஊடுபயிராக நீண்ட கால மரத்தோப்புகளில் – கூடுதல் வருமானத்திற்கான ஓர் வழி.

நீண்ட கால மரத்தோப்புகளில் ஊடுபயிர் செய்வது நல்ல ஓர் செயலாகும். மரங்களுக்கிடையே ஊடுபயிர் செய்ய வேண்டும் என்றால் கண்டிப்பாக மரங்களை நல்ல இடைவெளி விட்டு நட்டு இருக்க வேண்டும். நீண்ட கால மரங்களை நடவு செய்து, அத்தோப்புக்குள் ஊடுபயிர் செய்வதினால் உறுப்பினர்கள் தங்களிடம் உள்ள நிலம், தண்ணீர், இயற்கை உரம், மற்றும் அவர்களின் கடின உழைப்பை நல்ல வழியில் பயன்படுத்துகிறார்கள், இந்நற்செயல் அவர்களுக்கு நல்ல பலன் அளிக்கும். மரங்களுக்கிடையே ஊடுபயிர் செய்வதற்க்கு முன், ஊடுபயிர் அம்மரங்களின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுத்துமா என்று பார்க்கவேண்டும்.

- மாமரங்களுக்கிடையே குறுகிய கால காய் கனி மற்றும் வேர்க்கடலை போன்றவற்றை பயிர்யிடலாம்.
- கொய்யா மரங்களுக்கிடையே குறுகிய கால காய் கனி பயிர்களை வளர்க்கலாம்.
- சப்போட்டா மரங்களுக்கிடையே குறுகிய கால காய் கனி பயிர்களை வளர்க்கலாம்.




Members of Thiruthani Center are practicing groundnut in the newly planted mango tree groves.
திருத்தணி மையத்தை சேர்ந்த உறுப்பினர்கள் மாமரங்களுக்கிடையே வேர்கடலை பயிரீடுகின்றனர்



Members of Tindivanam Center are practicing bitterguard in the newly planted teak tree groves.
திண்டிவனம் மையத்தை சேர்ந்த உறுப்பினர்கள் தேக்கு மரங்களுக்கிடையே பாவர்காய்யை பயிரீடுகின்றனர்



Sign the GHG agreement and take the voucher payment
ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## Small Groups of Narmapallam

Small Groups of Narmapallam Village, who received free seedlings donated by Inner Wheel Club, Adyar, Chennai started to receive voucher payment. Narmapallm Village falls in dry area, but still the members work very hard to keep their trees live. During May 2008, Devan, Kavitha, Ellammal, Shrikanniyamman, Ganga, Angalaparameswari, Devendhiran and Melmalaiyanur Small Groups are getting voucher for all their live trees. These groups have planted multiple species of trees like, mango, neem, teak, sapota and nelli. They also practice regularly short time vegetable, gram and groundnut as intercrops in between their trees. Practicing intercrops keeps the members busy and this also helps their trees to grow well, above this, they also get good yield from intercropping.

## நர்மாபள்ளம் கிராமத்தைச் சேர்ந்த சிறுகுழுக்கள்

நர்மாபள்ளம் கிராமத்தைச் சேர்ந்த சிறுகுழுக்கள் சில மாதங்களுக்கு முன்பு சென்னையை சேர்ந்த Inner Wheel Club யிடம் இருந்து இலவச தேக்கு நாற்றுகளை பெற்றார்கள், இச்சிறுகுழுக்கள் அனைவரும் பற்றுச்சீட்டை (ஊக்கத் தொகை) பெற தொடங்கிவிட்டனர். நர்மாபள்ளம் கிராமம் அதிகபச்சம் வறண்ட பூமியானது, ஆனால் உறுப்பினர்களின் கடின உழைப்பினால் எல்லா மரங்களும் நன்கு பராமரிக்கப்படுகிறது. மே 2008ல் தேவன், எல்லமாள், ஸ்ரீகன்னியம்மன், கங்கா, அங்காளபரமேஸ்வரி, தேவேந்திரன் மற்றும் மேல்மலையனூர் சிறுகுழுக்கள் அனைவரும் அவர்களிடம் உள்ள எல்லா உயிருடன் இருக்கும் மரங்களுக்கான ஊக்கத்தொகையை பெறுகின்றனர். இச்சிறுக்குழுக்கள் அனைவரும் நீண்ட கால மரங்களான மா, வேம்பு, தேக்கு, சப்போட்டா மற்றும் நெல்லி போன்ற மரங்களை நடவு செய்து உள்ளனர். இக்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஊடுபயிர் செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். தொவரை, வேர்கடலை மற்றும் சில குறுகிய கால காய் கனி பயிர்களை ஊடுபயிராக பயிரிட்டு வருகின்றனர். ஊடுபயிர் செய்வதின் மூலம் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு இருக்கின்றது மற்றும் நல்ல வருமானமும் கிடைக்கின்றது.



Officials from AeroIT, Bangalore are visiting the mango groves of Narmapallam Village
நர்மபள்ளம் கிராமத்தில் மாமரத்தோப்புகளை AeroIT நிறுவனத்தை சேர்ந்தவர்கள் பார்வையிடுகின்றனர்.



Members of Narmapallam Village are maintaining their trees healthy by their hard work and by using natural manure.
நர்மபள்ளம் கிராமத்தை சேர்ந்த உறுப்பினர்கள் கடின உழைப்பினாலும் மற்றும் இயற்கை உரத்தினாலும் அவர்களின் மரங்களை நன்கு பராமரிக்கின்றனர்.

Plant a fruit tree this monsoon, your grandchildren may be grateful
இந்த மழை காலத்தில் பழ மரங்களை பயிரிடுங்கள், உங்கள் பேரப்பிள்ளைகள் நன்றியுடன் உங்களை நினைவுகூறுவார்கள்.

## Dhandapani Small Group of Thirupattur Center

The members of this small group are following the best practices of TIST at Arangalthurugam Village of Thirupattur Center. They have dedicated about 7 acres of land for planting trees under TIST Program. In four groves namely, Latha, Latha1, Shanmugam and Tamilselvan, they have planted mango and teak trees. Since their groves are situated very close to hill, they had to work hard to prepare the land to plant trees. Groundnut and gram are their favorite intercropping species, which they do it regularly. One of the members of this small group says that, since they have given lot of spacing between the mango trees and so, intercropping can be done for several years, which would give them continuous good yield.

## திருப்பத்தூர் மையத்தை சேர்ந்த தண்டபாணி சிறுகுழு

இச்சிறுகுழு உறுப்பினர்கள் TIST யின் சிறந்த பயிற்சி முறைகளை திருப்பத்தூர் மையத்தை சேர்ந்த அரங்கள்துருகம் கிராமத்தில் செயல்படுத்தி வருகின்றனர். இவர்கள் TIST யின் திட்டத்தில் மரம் நடவு செய்வதற்காக 7 ஏக்கர் நில பரப்பபை ஒதுக்கியுள்ளனர். அவர்களின் நான்கு தோப்புகளான லதா, லதா1, சண்முகம் மற்றும் தமிழ்ச்செல்வியில் மா மற்றும் தேக்கு மரங்களை நடவு செய்து உள்ளனர். அவர்களின் இந்த நான்கு தோப்புகளும் மலை ஓரம் இருப்பதினால் அவர்கள் கடினமாக உழைத்து மரங்களை நடவு செய்து உள்ளனர். க்ஷதாவரை மற்றும் வேர்க்கடலை போன்றவற்றை தொடர்ந்து ஊடுபயிர் செய்து வருகின்றனர். மரங்களுக்கிடையே நல்ல இடைவெளி விட்டதினால் நீண்ட காலங்களுக்கு எங்களால் ஊடுபயிர் செய்ய வாய்ப்புண்டு, இது எங்களுக்கு நல்ல வருமானத்தை பெற்றுத் தரும் என்று கூறுகிறார் இக்குழுவின் ஓர் உறுப்பினர்.



Members of Dhandapani Small Group at their mango grove
தண்டபாணி சிறுகுழு உறுப்பினர்கள் அவர்களின் மா தோப்பில்

The members of this group use only natural manure using cow dung. Presently, the goat manure has become very valuable. Members who have goat can collect the goat waste and prepare good goat manure, which can be sold for good cash. The members of Dhandapani Small Group are using goat manure too for their tree groves.

One way it is a good practice to have goats and use their waste for manure, but in the other way, goats have a very bad reputation of degrading the environment. Members will have to take utmost care while grazing the goats, so that, the goats do not graze over the cultivated area or newly planted trees.

இக்குழு உறுப்பினர்கள் இயற்கை உரத்தை நம்புகின்றனர், மாட்டு சாணத்தை நன்கு பயன்படுத்துகின்றனர். தற்பொழுது ஆட்டு ஏறு நல்ல விலையுள்ள உரம் ஆகும். இக்குழு உறுப்பினர்கள் ஆட்டு உரம் தயாரிப்பதற்க்கு தேவையான பொருட்களை சேகரித்து உள்ளனர். இந்த உரத்தை நல்ல விலைக்கு விற்கலாம். இக்குழு உறுப்பினர்கள் ஆட்டு உரத்தையும் அவர்களின் மரத்தோப்புகளுக்கு பயன்படுத்துகின்றனர்.

ஓர்வழியில் ஆடுகளை வளர்த்து ஆட்டு உரத்தை பயன்படுத்துவது நல்லதொரு செயல், ஆனால் ஆடுகள் காடுகளை அழித்துவிடும். ஆடுகளை வளர்க்கும் போது அவைகளினால் பசுமைக்கு எந்த ஒரு சீற்றமும் ஏற்படாத வழியில் வளர்க்க வேண்டும்.






Member of Dhandapani Small Group showing the goat manure from their grove
தண்டபாணி குழுவின் உறுப்பினர் அவர்களால் சேகரிக்கப்பட்ட ஆட்டு உரத்தை எடுத்து காட்டுகிறார்.





Goat manure collected in Narmapallam Village
நர்மாபள்ளம் கிராமத்தில் உறுப்பினர்களால் சேகரிக்கப்பட்ட ஆட்டு உரம்

## டிஜஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஜஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஜஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஜஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஜஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீ இடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஜஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஜஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஜஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்களும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.